விலை ரூபா 1-00 ★

**றிக்கோ**

யாழ். நகரில் சுகாதாரமானதென
முதற் பரிசு பெற்ற
றிக்கோவுக்கு
வேறு கிளைகள் இல்லை
**றிக்கோ**
சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.

4529

# ஈழநாடு
THE EELANADU

**றிக்கோ**

யாழ். நகரில் சுகாதாரமானதென
முதற் பரிசு பெற்ற
றிக்கோவுக்கு
வேறு கிளைகள் இல்லை
**றிக்கோ**
சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.

4529

மலர் 24 ஆவணி 30 ஜுலகம் 26 இதழ் 214

யாழ்ப்பாணம் புதன்கிழமை 15—9—82

★ மத்தியகிழக்கு வேலைவாய்ப்பு மோசடி:

# சென்னை வீதிகளில் அலைந்து திரியும் 23 இலங்கைத் தமிழர்!

## கொழும்பில் பெருமளவு பண்ணம் பெற்றவர் தலைமறைவு

(சென்னை)

**மத்திய கிழக்கு நாடுகளில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், பெருந்தொகையான பணத்தை முகவர் நிலையமொன்றுக்குக் கட்டிய இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருபத்து மூன்று பேர் கையிலிருந்த உடமைகளையும், பணத்தையும் இழந்து கடந்த நான்கு மாதங்களாக சென்னை வீதிகளில் அலைந்து திரிகின்றனர்.**

*இந்த இளைஞர்கள் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தமது அவல நிலையை எடுத்துக்கூறித் தம்மை இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். இலங்கை அரசின் கவனத்துக்கு இப்போது இது கொண்டுவரப்பட்டுள்ளது.*

கொழும்பில் வேலைக்கு ஆட் சேர்க்கும் முகவர் நிலையமொன்றில் தலா பதினெட்டாயிரம் ரூபாவைக்கட்டி முப்பத்தேழு தமிழ் இளைஞர்கள் விமானத்தில்புறப்பட்டார்கள். இவர்களுக்கு சென்னை- பம்பாய்- ஓமான் என்றும், சிலருக்கு சென்னை-பம்பாய்-சவூதி என்றும் விமானடிக்கட் வழங்கப்பட்டிருந்தது. டாக்டர் றிஸ்லி என்பவரே இவர்களை அழைத்துச் சென்றார். ஆனால் சென்னை சென்றதும் வீசா கிடைக்கவில்லை என்று கைவிரிக்கப்பட்டது. பதினுன்கு இளைஞர்கள் உடனடியாகவே இலங்கை திரும்பிவிட்டனர். மற்றைய 23 பேரும் அங்கேயே நிர்க்கதியாகிவிட்டனர்,

ஜூன் 17ந்திகதி, 24ந் திகதி 29ந் திகதி ஆகிய தினங்களில் மூன்று தொகுதியாக இந்த இளைஞர்கள் இந்தியா சென்றனர்.

வேலையை ராஜினமாச் செய்தவர்கள் சிலர்; இருவருட லீவில் சென்றவர்கள் சிலர்; வேலையில்லாமல்இருந்தவர்கள் சிலர்.

நகை அடைவுவைத்தும், காணியை ஈடுவைத்தும், பல விதங்களில் கஷ்டப்பட்டே

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சித் தொகுதியில் ஆசிரியர் பற்றுக்குறையை நிவர்த்திசெய்ய புதிய முறை

[கிளிநொச்சி]

கிளிநொச்சித் தொகுதியில் நிலவும் ஆசிரியர் பற்றுக் குறையை நிவர்த்தி செய்வதற்கு புதிய வழிமுறை ஒன்று நடைமுறைக்கு வரவுள்ளது. இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளின் ஆசிரியர்களை இங்கு சேவைக்கு அமர்த்தி இவ் ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் மீண்டும் முன்னர் கற்பித்த பாடசாலைகளுக்குத் திருப்பிஅனுப்புதல். இதுவே அமுலுக்கு வரவுள்ள

[8ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் இன்று 'பாஸ்போர்ட்' அலுவலக திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) அலுவலகம் யாழ். பழைய செயலகத்தில் இன்று காலை திறந்து வைக்கப்படவுள்ளது

யாழ். அரசாங்க அதிபரும் யாழ் மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில், யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன் புதிய அலுவலகத்தைத்திறந்து வைப்பார்.

இவ்வைபவத்தில் எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு எம். சிவ

(8ம் பக்கம் பார்க்க)

## "குட்டிமணிக்கு எம். பி. பதவியால் எவ்வித பயனுமில்லை"!

### அமிருக்கு குமாரலிங்கம் கடிதம்

[கொழும்பு]

''குட்டிமணிக்கு எம். பீ.ப் பதவி வழங்குவதால் எவ்வித பயனுமில்லை. ஜனதிபதித் தேர்தல் வருகிறது. நிதானமாக ஆலோசனை செய்யுங்கள். செப்டம்பர் 17-ம் திகதியைத் தவறவிட்டுவிடாதீர்கள்.''

எதிர்க்கட்சி முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு சட்டத்தரணி திரு. க. குமாரலிங்கம் நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு குட்டிமணியை நியமிப்பது குறித்து கூட்டணி ஆலோசனை செய்வதாக திரு அமிர்தலிங்கம் நேற்று வெளியிட்ட

[8-ம் பக்கம்பார்க்க]



# இன்று குதூகல திறப்புவிழா

# ஹோட்டல் றெலெக்ஸ்

15-09-82 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆரம்பித்துவைப்பார்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

யாழ்நகரில் நவீன வசதிகள் கூடிய ஒரே ஒரு ஸ்தாபனம்

## ஹோட்டல் றெலெக்ஸ்

340, ஆஸ்பத்திரி வீதி, - யாழ்ப்பாணம்.

4518



# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரேசன், பிரபல கல்லூரிகளுக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும் மேல் வீட்டுடன் சகல வசதிகளும் உண்டு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு; எஸ். பொன்னுத்துரை 'அம்பிகாபவனம்', திருநெல்வேலி, பலாலி வீதி, தொலைபேசி எண் 8255 (பழையது), 24255 புதியது. (4523)

உரும்பிராய் கிழக்கில் வீதியோரத்தில் மூன்றரைப் பரப்புக் காணி, கல்வீடு கிணற்றுடன் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: M. புஸ்பராசா, G. P. S, ரூேட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (4522)

## தேவை

அலுமினிய தொழிற்சாலைக்கு நல்ல அனுபவம் வாய்ந்த ஸ்பின்னர்கள் (Spinnar) தேவை நேரில் வரவும். 118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4521)

## தேவை

பஸ் லைசென்ஸ்சும் மோட்டார் சைக்கிள் லைசென்சும் உடையவரும் கடைவேலைகள் செய்யக்கூடியவரும் தேவை 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க. விளம்பர இல. 4508, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 4508

## வாடகைக்கு

சென். ஜோன்ஸ் அக்கடமி, கொன்வென்ற், யாழ்ஹோல், பொன்ட் இன்ஸ்ரிரியூட் இவைகளுக்கு அருகாமையில் A/L படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு அல்லது வேலை பார்க்கும் பெண்களுக்கு சகல வசதிகளுடனும் இடம் உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 4520, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (4520)

## தீ விபத்து

சென்னை செப் 14

நாமக்கல்லில் இடம் பெற்ற தீ விபத்தொன்றில் 5 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன.

(வெ)

## தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம் தெல்லிப்பழை

1982-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் திகதி நடைபெற இருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக் கிழமைக்கு பின்போடப்பட்டிருக்கிறது.

வ. சரவணமுத்து,
தலைவர். (4516)

## அமெரிக்கா விஜயம்

மணிலா செப் 14

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரு பேர்டினஸ்ட் மார்க்கஸ் 16 வருடங்களின் பின்னர் இன்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்கிறார். (வெ)

## இடைக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் சுயகிந்த சிங்கராஜர் டேவிட் அவர்களின் மரணசாதன விடயமாக.

இறந்தவர்.

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல: 1146/
Testy

தும்பளை, லோறன்ஸ் மரியதாஸ் பிலிப் நேரி
மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவாகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க இடைக்கட்டளை பற்றிய கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இம்மன்றில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டபின் இடைக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

27-8-82.

வரைவு

மன்றத்தின் கட்டளைப்படி
க. செல்வரத்தினம்
பதிவாளருக்காக

மனுதாரின் சட்டத்தரணி

4486

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 30-ம் திகதி
புதன்கிழமை
(15—9—82)

மேடம்: பரம்பொருளின் அருளுக்கும் இடமுண்டு. உபகார சிந்தை தலைதூக்கும். பொதுப் பணியில் ஈடுபடுவீர்கள், பொதுமக்களின் ஆதரவும் கிடைக்கும்.

இடபம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள் தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வெளியிடத்தில் இருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும்.

மிதுனம்: சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு. மேலிடத்து வாழ்த்தும்கிடைக்கும்

கடகம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் தாக்கமனப்பான்மைஉருவாகும். சினேகித வழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு

சிங்கம்: உணர்ச்சிமயமான தினம். மனப் போராட்டங்கள் நடைபெறும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும்,

கன்னி: பேச்சு வன்மையால் பெரும் புகழ்சேரும். பெரியோர்கள் ஆசி கூறுவர். அரசியல் வாதிகளாயின் அதிகசெல்வாக்கைப் பெறுவர்.

துலாம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மை தென்படும். பொறுமையுடன் நடப்பது நன்று.

விருச்சிகம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியும் உண்டு, ஆனந்தநிலை.

தனு: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகார சிந்தை மேலிடும், நண்பர் ஒருவர் கைகொடுத்தும் உதவுவர்.

மகரம்: வாய்வுக் கோளாறினால் வேதனைப்படுவீர்கள். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். எதிரிகளின் கோழைத்தன நடவடிக்கைகள் உங்கள் அமைதிக்கு உலைவைக்கும்.

கும்பம்: குடும்பத்தில்மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும். பொருள் வருவாயில் புதிய திருப்பம் ஏற்படும்.

மீனம்: தொல்லைகள் அதிகரிக்கும். எதிர்பாராத தடைகள் ஏற்படும். கடமையாற்றும் இடத்தில் கழுகுப்பார்வை வட்டமிடும். பணவிடயத்தில் அதிக சிந்தை நன்று.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், சேர். பி. இராமநாதன் வீதி, 71/18ம்இலக்கத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை என்றும் அழைக்கப்படும் இலட்சுமி அம்மா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. ரி/ 3681

கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் மகள் நாகேஸ்வரி, 71/18, சேர். பி. இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ந்நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு 6ம் மாதம் 30ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

தயாரிப்பு:
இராமலிங்கம்
பாலசுப்பிரமணியம்,
சட்டத்தரணி,
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். 4474


# COMPUTER PROGRAMMING COURSE - 2

**Commencing on Saturday 18th September 1982**

**Languages Taught:- Basic and Cobol.**

CONTACT

REGISTRAR,

**Patrician Institute**

59, ST. PATRICK'S ROAD, JAFFNA. (4510)



# அறிவித்தல்

வாடிக்கையாளர்களின் வசதிக்காக நாம் எமது யாழ். கிளையின் களஞ்சியம் ஒன்றை கிளிநொச்சி, கண்டி வீதியிலுள்ள A. K. R. கட்டிடத்தில் திறந்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்களுக்குத் தேவையான

## உரவகைகள், தெளிகருவிகள், கிருமிநாசினிகள்

யாவற்றிற்கும் யாழ். கிளையுடன் தொடர்பு கொண்டு பொருட்களை களஞ்சியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்

**A. BAUR & CO LTD,**
**(Jaffna Branch)**
NO: 5, CLOCK TOWER ROAD, JAFFNA.

**ஏ. பவர் அன் கோ. லிமிட்,**
**(யாழ். கிளை)**
இல: 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

TELE PHONE: 7156, 7651 :தொலைபேசி

4517

### உலகநாடுகளில்

# அணுசக்திபாவனை அமுலாகவேண்டும்; இன்றேல் 20 வருடங்களில் மின் தட்டுப்பாடு!

## -- பிரான்ஸ் எச்சரிக்கை

வியன்னு செப். 14

''உலகத்தில் அணுசக்தி பாவனை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இல்லாவிடில் இன்னும் இருபதுவருட காலங்களில் உலகம் முழுவதிலும் எரிசக்தி தட்டுப்பாடு நிலவும் என்று பிரான்ஸின் அணுசக்தி ஆராய்ச்சித்துறை சார்ந்த பிரமுகரான திரு மைக்கல் பெக்குவார் எச்சரித்துள்ளார்.

வியன்னுவில் உலகின் அணுசக்திப்பாவனைகுறித்து நடத்தப்பட்ட மகாநாடொன்றிலேயே மேற்கண்ட எச்சரிக்கையை இந்த பிரான்ஸ் நிபுணர் விடுத்தார்.

இன்று உலகில் 27 அணுசக்தி நிலையங்கள் காணப்படுகின்றன. முற்றாக அணுசக்திப் பாவனை உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் எட்டு வீதம் கூடுதல் மின்சக்தியை உலகநாடுகள் பெற முடியும்.

பிரான்ஸ் அணுசக்திபாவனையில் முன்னணி வகிக்கும் நாடாகவிருக்கின்றது. இங்கு முப்பது வீதமான மின்சார உற்பத்தி அணுசக்தி கொண்டே பெறபபடுகிறது எனத்தெரிவிக்கப்பட்டது. (கி)

## அடிமைகளாக இருந்த 254 பேர் விடுதலை

சென்னை செப். 14

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் கொத்தடிமைகளாக இருந்தவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 254 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் இவர்கள் ரயில்வண்டி மூலம் மத்திய பிரதேசத்திலிருந்து தமிழகம் வந்தனர் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய பிரதேசத்திற்கு நல்லவேலைவாய்ப்புகள் கிடைக்குமென்று நம்பிச்சென்ற இவர்கள் அங்கு கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனராம்.

கடுந்துன்பங்களை அனுபவித்ததாகக் கூறும் இவர்கள், தமது சம்பளம் மிகக் குறைவாகவிருந்ததென்றும் இதுபற்றி முறையிட்டபோது தமக்கு மிளகாய்ப் பொடியை கண்களில் தூவினர் என்றும் கூறினர்.

இவர்களை இவ்வாறு நல்ல வேலைவாய்ப்புகளை வழங்குவதாக மத்திய பிரதேசத்திற்கு அழைத்துச் சென்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

தமிழகப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்தே, மத்திய பிரதேசத்திற்குச் சென்ற சி.ஐ.டி யினர் அங்கு இந்த அப்பாவிமக்களை விடுவித்தனர். (கி)

## அபிவிருத்தித்திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது?

### உடுப்பிட்டி எம். பி. விளக்கம

[கரவெட்டி]

''கிராமோதய சபைகள் பிரதேச சபைகள் கிராம அபிவிருத்தியில் பாராளுமன்ற உறுப்பினரோடு இணைந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் துன்னாலை தெற்கு கிராமோதயம் சார்பில் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்திய பாரதி நூற்றாண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா கிராமோதயத் தலைவர் திரு. க. வ. இராசையா தலைமையில் துன்னாலை கோவிற்கடவையில் உள்ள தாமரைக் குளத்தடியில் நடைபெற்றது.

உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- ''கிராமோதய சபைகள் கிராம அபிவிருத்திக்குப் பக்கபலமாகவே உருவாக்கப்பட்டன. கிராமிய மட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரோடு அபிவிருத்திப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதே இவற்றின் குறிக்கோளாகும். ஆனால் ஒரு சிலர் கிராமோதய சபைகள், பிரதேச சபைகள் பற்றித் தவறான கருத்தைக் கொண்டுள்ளனர் அதனால் அவர்கள் அதிகார ஆசை பிடித்துச் செயற்படப் பார்க்கிறார்கள். அதிகாரம், ஆசை உச்சக்கட்டத்திற்குச் செல்லுமேயானால் இறுதியில் ஒன்றுமே செய்யமுடியாத நிலையே ஏற்படும். எனவே, கிராமோதய சபைகள், பிரதேச சபைகள் பாராளுமன்ற உறுப்பினரோடு இணைந்து செயற்பட்டால்தான் திட்டங்கள் விரைவில் சிறந்த முறையில் நிறைவேற்ற முடியும்.

விழாவில் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க. நடராசா, யாழ். உப நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு, வட்டாரக்கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் பொன். கணேஷன், வ. க. ஈசுரபாதம், வ. தங்கராசா ஆகியோருட்பட பலர் கலந்து கொண்டனர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

## பொருளாதாரக் கொள்கையால் 4 கோடி 60 லட்சம் பேர் பாதிப்பு

வாஷிங்டன், செப். 14

அமெரிக்காவில் அதிபர் றீகன் நிர்வாகத்தின் பொருளாதாரக் கொள்கையால் பல நடுத்தர அமெரிக்கர்கள் பாதிப்படைந்துள்ளார்களென்று அறிவிக்கப்பட்டது.

வருடாந்தம் 15,000 அமெரிக்க டாலர்களை வருமானமாக பெறும்4 கோடி 60 லட்சம் அமெரிக்கர்களே இவ்வாறு பாதிப்புக் குள்ளாகியுள்ளனர். இவர்கள் மறைமுகமாக தமது வருமானத்தில் நான்கு வீதத்தினை இழப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வரிவிதிப்புக்கள், மற்றும் றீகன் நிர்வாகத்தின் நடைமுறைகள் பல, செல்வந்தர்களுக்குச் சாதகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## தமிழ்நாடு சனத்தொகை அதிகரிப்பில் சாதக நிலை!

சென்னை, செப். 14

தமிழ்நாட்டின் 1981ம் ஆண்டுக்கான சனத்தொகை அதிகரிப்பு பற்றிய கணிப்பீடு குடும்பத்திட்ட பிரசாரப்பகுதியினருக்கு சாதகமாக விளங்குகின்றது.

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டின் சனத்தொகை அதிகரிப்பு வீதம் 17·23 சத வீதமாகவே அதிகரித்துள்ளது இதே வேளை முழு இந்தியாவிலும் சனத்தொகை 24 8 வீதமாகக் காணப்படுகின்றது.

இன்னும் நான்கு ஆண்டுகளில் குழந்தைகளின் பிறப்பு, இறப்பு ஆகியன தற்போதை வீதாசாரப்படி போகும்பட்சத்தில் குறைவடைந்து காணப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

கி. பி. 2000 ஆண்டளவில் தமிழ் நாட்டில் பிறப்புவீதம் 1000க்கு 21 ஆகவும் இறப்பு வீதம் 1000க்கு 9 ஆகவும் காணப்படுமென்று கூறப்பட்டது

தமிழ்நாட்டில் குடும்பத் திட்ட அலுவல்களுக்காக 81ம் 82ம் ஆண்டுகளில் 13 லட்சத்து 60, ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 83ம், 84ம் ஆண்டுகளுக்கு 23 லட்சத்து 10ஆயிரமாகஇத்தொகைஒதுக்கப்பட்டுள்ளது. (கி)

## தெற்கு ஸ்பெயினில் விமான விபத்து: 70 பேர் பலி 80 பேர் படுகாயம்!

மட்றிட் செப். 14

ஸ்பெயின் தெற்கு பகுதியிலுள்ள மலாகா என்ற விமான நிலையத்தில் ஜெட் விமானம் ஒன்று மேலெழுந்த சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளாகியது. இதனால் 70 பேர் கொல்லப்பட்டனர்.

நாநூறு பயணிகளுடன் நியூயோர்க் நகர் நோக்கி இந்த விமானம் புறப்பட்டது இதில் இருபதவர்களில் அநேகர் அமெரிக்கர்கள் என்றும், ஏனையவர்கள் ஸ்பானிய நாட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் எண்பது பேர் படுகாயத்துக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 200 பேர் சிறுகாயங்களுக்குட்பட்டுள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளானதும் பெரும் புகைமண்டலத்துடன் தீச் சுவாலைவிட்டெரிந்ததென்றும், இதன் மத்தியிலேயே மீட்புப் பணிகள் நடைபெற்றனவென்றும் அறிவிக்கப்பட்டது. (கி)

### ✯ 1979-ம் ஆண்டு

## தப்பிஓடிய சிறைக்கைதி மீண்டும் பிடிபட்டார்!

(மன்னார்]

மிகித்திரிகல சிறைச்சாலையிலிருந்து 79 ஆம் ஆண்டு தப்பியோடிய கைதியொருவர் மடு வீதியில் வைத்து முருங்கன் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

பல குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவரெனக் கூறப்படும் அன்ரனி என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

இரகசிய தகவல் ஒன்றினையடுத்து மடு வீதியிலுள்ள வீடொன்றிற்கு முருங்கன் பொலிஸ் சார்ஜன்ட் சின்னத்துரை தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இக்கைதியைக் கைது செய்தது.

இத்துடன் தோட்டாக்கள் நிரப்பப்பட்ட துப்பாக்கி ஒன்றினையும், ஏற்கனவே களவாடப்பட்ட சைக்கிள்கள், றேடியோக்கள் போன்ற பொருட்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்ட நபர் சிறையிலிருந்து தப்பிய பின் மடுவீதியில் இருந்து கொண்டு பல திருட்டுச் சம்பவங்களிலும், கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. [அ]

## சிறந்த செய்திக்கு ஐயாயிரம் ரூபா ரொக்கப்பரிசு!

சென்னை செப் 14

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் சிறந்த செய்தி யொன்றுக்கு ஐயாயிரம் ரூபவை ரொக்கப்பணமாக வழங்க முன்வந்துள்ளது. இச்செய்தி 1500 வார்த்தைகளை மட்டுமே கொண்டிருத்தல் வேண்டும்.

இத்தகவலை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஓவியம், சிற்பம் பற்றிய சிறந்த நூல்களுக்கும் தலா ஐயாயிரம் ரூபா பரிசாக இப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

### தமிழ் நாட்டில்

## பத்திரிகையாளருக்கு சாதகமாகசட்டத்தில்திருத்தம்

சென்னை, செப். 14

தமிழ் நாட்டில் பத்திரிகையாளர்களைப் பாதிக்கும் வகையில் காணப்படும் பீனல் 292 எ பிரிவுச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவிருக்கின்றது. இத்தகவலை தமிழ்நாடு செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

தற்போதிருக்கும் மேற்குறிப்பிட்ட பிரிவுச்சட்டத்தில் தவறுதலான சர்சைக்குரிய செய்தியைப் பிரசுரிக்கும் பத்திரிகையாளர் ஒருவருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளதுடன், குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் இரண்டிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையும் வழங்க வழிசெல்யப்பட்டுள்ளது

இத்தகைய தண்டனைகள் கடுமையானவையென்று தமிழகப் பத்திரிகையாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்தே இந்தச் சட்டப்பிரிவில் திருத்தம் கொண்டுவர தமிழக மாநிலஅரசு முன்வந்துள்ளது. இத்திருத்தம்பற்றி முடிவுகளை எடுக்க சட்டத்துறை, செய்தித்துறை அமைச்சுக்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செய்தித்துறை அமைச்சரிடம் இதுபற்றிக் கேட்டபோது ''பீகார் மாநிலத்தில்போன்று தமிழகத்திலும் பத்திரிகையாளர்களுக்கெதிராகச் சட்டம் கொண்டுவரப்படமாட்டாது'' என்று தெரிவித்தார். (கி)

## மணிவாக்கு

“அறிவாளியின் ஒருநாள் வாழ்வு, ஒரு முட்டாளின் முழுவாழ்வுக்கும் சமமாகும்”

— அராபியப் பழமொழி.

# நமது நோக்கு

## குடியாட்சியா அல்லது தடியாட்சியா?

“இந்த ஆட்சிக்கு ஆதரவளிக்கும் தமிழ் மக்கள் மருத்துவமனைக்கு அனுமதிக்கபபடவேண்டியவர்கள்’ என்று ஒரு தமிழ் எம். பி. ஒருமுறை பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட நினைவு வருகின்றது.

சந்தர்ப்பம் எதுவாகிலும், ஆட்சிக்கு எதிர்ப்புக்காட்டவேண்டியவர்கள் தமிழ் மக்கள் என்ற அடிப்படையில் கூறப்பட்டதால், மற்றைய இனத்தவர் இதனை ஆதரிக்கின்றார்கள் என்ற கருத்து உள்ளடங்கியிருப்பதுபோல தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர் பட்டியலும், அதன் பிரசாரத்தில் வெளிவரும் தகவல்களும் அப்படியல்ல என்பதைக் குறிக்கின்றன.

வகுப்புவாதம் என்ற அடிப்படையில் மட்டுமல்ல, வயிற்றுவாதம் என்ற வகையிலும் ஆட்சிக்கு பலத்த எதிர்ப்பிருப்பதாக கொள்ளலாம். எனவே நாட்டிலுள்ள மருத்துவ மனைகள் அனைத்திலும் இட நெருக்கடி இருநதபோதும், ஏமாற்றத்துக்குப் பலியாகிஅரசை ஆதரிக்கும் ‘நோயாளிகள்’ அதிகம் இலர்என்றகாரணத்தால் இது ஒரு பிரச்னையாகாது.

1971 புரட்சியில் சிங்கள இளைஞர்கள் தீவிரமாக ஈடுபட்டு ஆட்சியைக் கவிழ்க்கவும் முயன்றனர். இந்த ஆட்சியில் தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருப்பதால், அதனைத் தடுக்க ஏற்படுத்திய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல தமிழ் இளைஞர்கள் கற்பனைக்கெட்டாத துன்பங்களுக்கும், மரண தண்டனைக்கும் உள்ளாகின்றனர்.

சிங்கள, தமிழ் இளைஞர்களென்று நாம் பாகுபடுத்தாமல் இவ்வித அடக்குமுறைச் சட்டத்தை அவதானித்தால், கடந்த ஆட்சியும், இந்த ஆட்சியும் இளைஞர் குழப்பங்களுக்கும், பயங்கரவாதத்துக்கும் தடைச் சட்டத்தின் தீவிரத்திலேயே தங்கியிருப்பது புலனாகின்றது.

நாட்டைக கலக்கும் குழப்பத்தை அடக்க, ஆட்சிக்கு உரிமையும், அவசியமும் உண்டு. ஆனால் அதன் அடிப்படை விவகாரங்களை ஆராய்ந்து அவற்றிற்கு பரிகாரம் தேடும் பொறுப்பு அதிலும் மேலானது.

இளைஞர்கள் மர்மமாகக் கொலையுண்டும், காணாமற்போயும், நெடுங்காலம் தடுப்புக்காவலிலும், சித்திரவதையிலும் காலம் கழிக்க உதவும் சட்டம், என்ன காரணம் கொண்டும் ஒரு குடியாட்சிக்குரிய சட்டமாகாது.

அறம் என்பது இயற்கைச் சட்டம்; எல்லாருடைய வாழ்க்கைக்கும்பொதுவான அடிப்படை அதுவே. அறநெறி அல்லது சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டே குடியாட்சி அமையவேண்டும் இல்லையானால் அது தடியாட்சியை விடக் கொடுமையானது.

இந்த அறநெறி ஆட்சியாளர்களிடமிருந்து மக்களுக்குச் செறிய வேண்டும் பிறருக்கு ஊழியம் செய்ய முன்வந்தவர்கள் தங்கள் பாதுகாப்புக்குச் சட்டம் இயற்றி மக்களை இம்சைப்படுத்தல் நல்லாட்சிக்கு அழகாகாது.

இளைஞர்களின் குழப்பம் எந்த இனத்தவரென்றாலென்ன— பொதுவாகத் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி காரணமாகவே ஏற்படுகின்றது.

தமிழ் இளைஞர்களுக்கு அதற் மேலாக அரசியல் பாகுபாடு ஒரு தனிப்பட்ட அநீதியாக அமைகின்றது; இதனைத் தீர்த்து வைக்கும் திட்டம் அரசின் அரசியல் ஞானத்துக்கும் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டதாகவிருப்பது வியப்பல்ல,

இளைஞர்கள் படும் கொடுமைகள் ஒரு புறம்; பொது மக்களின் நல்வாழ்வு திருப்திகரமாகவுள்ளதா? தேர்தல் பிரசாரம் விடையளிக்காது. தேர்தல் முடிவு தானும் விமோசனமளிக்குமென்பது சந்தேகம்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் இன்றைய அளவில் மக்களுக்கு நம்பிக்கை ஒளி ஊட்டுகின்றதா?

செல்வர்களிடம் பொருள் குவிந்து கிடக்கின்றது: ஏழைகள் பட்டினியால் வாடுகின்றனர். தேவைக்கு மேற்பட்ட பொருள்களைச் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பவர்களே மற்றவர்கள் திருடும்படியாகத் தூண்டுகிற குற்றவாளிகள்,

நாம் இங்கே திருட்டை ஆதரிக்கவில்லை; பொதுவுடைமைக் கொள்கையையும் ஆதரிக்கவில்லை;

செல்வரிடமிருந்து செல்வத்தைப் பறித்தலை நாம் போற்றவில்லை; ஆனால் பணத்தைக் குவிப்பதால், பணப்பலம் ஆட்சியையே ஆட்டி வைக்கிறது. இன்று வியாபாரிகளின் கையிலேயே ஆட்சியின் திறவுகோல்உண்டென்பது மிகையாகாது.

தகாத வழியில் பணம் சம்பாதிப்பவர் கூட்டம் பெருகிவருவதால் உழைக்கின்ற மக்கள் வாழ்க்கையில் வாடுகின்றார்கள்; உழைக்கின்றவன் வயிறு ஒட்டி வருகின்றது,

நாட்டின் உழவர்கள் தொழிலாளிகள் சிறக்கும் திட்டம் இன்று பேசப்படும் அபிவிருத்தியில் முதன்மை பெற்றிருப்பதை நாம் காணோம்; எனவே வாக்காளர்களின் வாக்கு 51 சத வீதம் ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு கிடைக்குமானால், அவர் ஏழைமக்களின் ஆதரவைக் கொண்டவரென்று கணிக்கப்படவேண்டியது.

அது உருவாகுவதெங்ஙனம்? வறுமைப் பிரச்னையைத் தீர்க்க முடியாத நிலையிலேயே அடக்கு முறை உருவாகின்றது. இது தவிர்க்க முடியாத நிலையாகின்றது.

தடியாட்சி நீங்கி குடியாட்சி ஓங்க பொது மக்கள் விழிப்படைய வேண்டும்.

---

அடுத்தமாதம் முதல்

# யாழ். மாவட்ட உப அலுவலகங்களின் நிர்வாகங்களில் மாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கும் உப அலுவலகங்கள் அந்தந்தப் பகுதிப் பிரதேச சபைத் தலைவர்களின் அனுசரணையுடன் அடுத்த மாதம் முதல் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களின் மேற்பார்வையில் இயங்கவுள்ளன.

இந்த உப அலுவலகங்கள் கடந்த ஒருவருட காலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பில் அலுவலகங்களை நடத்திவந்தன இனிமேல் இந்த அதிகாரிகளின் சேவை நிறுத்தப்பட்டு, அந்தந்த உப அலுவலகங்களில் கடமையாற்றும் பிரதான உத்தியோகத்தர்களின் பொறுப்பிலும், 16 பிரதேச சபைத் தலைவர்கள், 9 அபிவிருத்தி சபை உறுப்பினர்களின் மேற்பார்வையிலும் செயற்படவுள்ளன

ஒரு மாவட்ட சபை உறுப்பினருக்கு 6 உப அலுவலகம் வீதம் 9 உறுப்பினருக்கும் 54 உப அலுவலகங்களும் முறையே பிரித்து வழங்கப்பட்டுள்ளன. (மா—அ)

---

# வீணடிக்கப்படும் பல லட்சம் கோடிகள்

ஆர். ஞானசேகரம்

மனித குலவரலாற்றில் அற்புதங்கள் நடந்து வருகின்றன. பூமியிலும் விண்வெளியிலும் விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளை ஈட்டி வரும் மனிதன் இப்போதெல்லாம் ஒன்று, பத்து, நூறு என்று எண்ணுவதில்லை. பதிலாக லட்சங்கள், கோடிகள், கோடானு கோடிகள் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளான். பொருளாதார நிபுணர்கள் லட்சம் கோடியூனிட் மின்சக்தி பற்றியும் பல லட்சம் கோடி கனமீட்டர் எரிவாயுபற்றியும் கணக்குத்தரத் தொடங்கிவிட்டனர்.

ஒரு லட்சம் கோடி என்றால் என்ன? ஒன்றுக்குப் பின்னர் 12 சைபாகள் போட வேண்டும். அதாவது 1,000,000,000,000. நமது நாளாந்த வாழ்க்கைக் கணிப்பீடுகளின்படி பார்த்தால் இந்த எண்ணிக்கை அதீதமானதாகத் தோன்றும். லட்சம் கோடி விநாடிகள் என்றால் எவ்வளவு காலம். அது 32000 ஆண்டுகள்.

புராதன எகிப்திய பிரமிட்டுகள் கட்டப்பட்ட காலத்திலிருந்து, நம் காலம் வரையுள்ள இந்த நாகரீகத்தின் வரலாறே 15000 கோடி மணித்துளிகள்தாம்.

உலகில் இதுவரை மூன்று நாடுகளில் தான் வருடாந்த உற்பத்தியின் பொருளாதார மதிப்பு லட்சம் கோடி டாலர்களைத் தாண்டியுள்ளது. அமெரிக்கா, சோவியத் யூனியன், ஜப்பான் ஆகியவை தாம் இந்த நாடுகள். இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், பிரேசில். மெக்ஸிகோ ஆகியவையும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுவிடக்கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஆண்டொன்றுக்கு மொத்த உலக உற்பத்தியின் மதிப்பு 10 லட்சம் கோடிடலர்களை எட்டியுள்ளது. அதே வேளையில் ல நாடுகளில் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்து வருகிறது. உலகளாவிய பணவீக்கம் ஏற்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகளது பொருளாதார நிலைகள் வேகமாக இராணுவமயமாகிவருகின்றன இராணுவ வாதம் பயங்கரமான அளவுக்கு வளர்ந்துள்ளது; அரசியலிலும் வெகுஜனத் தகவல் சாதனங்களிலும் செல்வாக்குச் செலுத்துகிறது.

இந்த இராணுவவாதத்தின் பயங்கரப் பசியைக் கட்டுப்படுத்தாவிட்டால் அடுத்த நூற்றாண்டு தொடக்கத்திற்குள் மனிதகுலம் லட்சோப லட்சம் கோடி டாலர்களை கரியாக்க வேண்டியிருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

“மனித குலம் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் அணுவாயுதத் தற்கொலைப் போக்கு, தலைதெறிக்கும் வேகத்தில் வளர்ந்து வருகிறது இத்தகைய போக்கில் ஏற்படும் எந்த ஒரு சிறுதவறும் பயங்கரமான விளைவையே ஏற்படுத்தும்” என்றும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

சென்ற 5 ஆண்டுகளில் நேட்டோ நாடுகளது ராணுவச் செலவு ஒன்றரை லட்சம் கோடி டாலர்களை விழுங்கியுள்ளது. 1981...1985ம் ஆண்டுகளில் மட்டும் அமெரிக்கா இத்தகைய தொகையினை இராணுவத்துறையில் செலவழிக்கவுள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியின் விளைவுகள் குறித்து பிரபல அமெரிக்கப்பத்திரிகையான ‘நியூயோர்க் டைம்ஸ்’ எச்சரிக்கை செய்துள்ளது. இராணுவத்துறைக்கென பெருந்தொகைப்பணம் செலவு செய்யப்படுவது நாட்டின் பொருளாதாரத்தை இனி வரப்போகும் சகாப்தங்களிலும் உணரக்கூடியவகையில் பாதிக்கப்போகிறது என்பதே நியூயோர்க் டைம்ஸின் எச்சரிக்கை.

இப் பத்திரிகையின் கணிப்பீடுகளின் படி, கடந்த 20 ஆண்டுகளில் தொழில்வளர்ச்சி பெற்ற 13 நாடுகளின் ராணுவச் செலவு பெரிதும் உயர்ந்துள்ளது. இந்த பெரும் ராணுவச்செலவினால் இந் நாடுகளின் பொருளாதாரம் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

80, 81ம் ஆண்டுகளில் அமெரிக்காவின் ராணுவச் செலவு 20,000 கோடி டாலர்களினால் அதிகரித்ததனால், ஜி என். பி. என்று சொல்லப்படும் மொத்த தேசிய உற்பத்தி கடந்த ஆண்டில் 2 சத வீதத்தால் குறைந்தது.

கடந்த நவம்பரில் இராணுவசெலவ நாலு சத வீதத்தால் உயர மொத்த தொழில் துறை உற்பத்தி 8 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இந்த நெருக்கடி பல தொழில் துறைகளைப் பாதித்துள்ளது.

ராணுவச்செலவு அதிகரித்ததன் காரணமாகப் பணவீக்கமும், வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துள்ளன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் வேலையில்லாதோர் தொகை அந்த நாடுகளின் அரசாங்கங்களுக்குப் பெரும் பயமுறுத்தலாகவே உள்ளது. இக் காரணங்கள் தாம் நியூயோர்க் டைம்ஸ் எச்சரிக்கை செய்வதற்கு காரணமாயமைந்தவை.

சகல நாடுகளும் ராணுவச் செலவைக் குறைத்தாலொழிய இந்த நெருக்கடிகளிலிருந்து விடுபடமுடியாது. அர்த்தமற்ற இந்த செலவுகள் உலகை அதலபாதாளத்திற்குள் தள்ளவேசெய்யும்,

கோடிக்கணக்கானவர்களை வேலைவெட்டியில்லாது உலகில் நலியவைத்து, பெரும் பணவீக்கத்தை ஏற்படுத்தி வரி பொருள் மற்றும் மூலப் பொருள்வளங்களை வீணடித்து வரும் இந்த பல லட்சம் கோடி டாலர்கள் கொண்ட ராணுவச்செலவினால் சாதிக்கப் போவது என்ன?

---

இலுப்பைக்கடவை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவாலய குளிர்த்திவிழா வைபவம் இன்று புதன்கிழமை நடைபெறுகின்றது.

## இலுப்பைக்கடவை நகர்மேவும் எங்கள் தாயே மாரியம்மா!!

- “பொன் சிவா”

“எழிலார் இலுப்பைக் கடவை நகர்
இலங்குந் தாயே! மன . முருகித்
தொழுவார் துன்பந் துடைப் பவளே!
சுருதி போற்றுந் தூய வளே!
அழியா மறையின் உட் பொருளே!
அம்மா! முத்துமாரி யென்னுந்
தெளிவே! தேனே! குளிர்த்தி — இன்று
தெவிட்டா அமுதே! போற்று கின்றோம்.

ஆட்டை இழுத்த குரங் கதைப்போல்
அகபட்டுழலும் மனித குலத்
தாக்கந் துடைத்துக் காப்ப வளே!
தாயே! இலுப்பைக் கடவை நின்று
வேப்பம் இலையில் விளையாடும்
விந்தைப் பொருளே! மாரி அம்மா
ஏத்துங் குளிர்த்தி நாள தனில்
இறைவி! உன்தன் தாள் பணிந்தோம்.

## ★ ஜனதிபதி தேர்தல்களம்

# "எனது வெற்றிக்கு 40 லட்சம் வாக்குகள் தேவை" - ஜே. ஆர்.

(கொழும்பு)

"எந்தவொருகட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்வரும் தேர்தலில் தோற்கடிக்க முடியாது எனது வெற்றிக்கு 40லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் தேவைப்படுகின்றன. இதனைப்பெற சகல ஐ. தே. க. அமைப்புகளும் சுறுசுறுப்பாக உழைக்கவேண்டும்"

ஜனதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன அக்குரணையில் நடைபெற்ற தமது தேர்தல் பிரசாரமொன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில் கூறியதாவது: "பாராளுமன்றத் தேர்தல்களும் ஜனதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் விரைவாக நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பது ஐ. தே. க. வின் நோக்கமல்ல. இந்த ஜனதிபதித்தேர்தல், நான் ஜனதிபதியாக இருந்ததன் விளைவுகளை எடைபோடவே நடத்தப்படுகின்றது இதில் நான் பெறும் வெற்றியே சுதந்திர வர்த்தகவலயம். வீடமைப்பு, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பு ஆகியன வெகுவாக வளர்ச்சியடைய வழிவகுக்கும்.

எனவே வாக்காளர்கள் தாம் போடும் வாக்கினை இத்தகைய வளர்ச்சிகளுக்கென்று போடுவதா? அல்லது கடந்த அரசாங்கத்தில் நிலவிய கியு வரிசை, சோறுசாப்பிடுவதற்கான தடை நெல்லை ஒருவர் தனது சொந்த விளைநிலத்திலிருந்தே கொண்டுவருவதற்கான தடை ஆகியனவற்றை மீண்டும் நிலவச்செய்யும் வகையில் போடுவதா? என்பதனைக் கருத்திற்கொண்டு போட வேண்டும்" என்ருர். (கி)

## "வேட்பாளர்களில் நானே சிறந்தவன்; ஜனதிபதியும் இதைக் கூறியுள்ளார்" -- கொல்வின்

(கொழும்பு)

"ஜனதிபதித் தேர்தலில் இறங்கயுள்ள வேட்பாளர்களில் நானே சிறந்தவன். இதனை ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் தெரிவித்துள்ளார். ஆகையினுல் இந்த அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கை ஒழிக்க அரசை எதிர்க்கும் சகலரையும், என்னை ஆதரிக்கும்படி கேட்கிறேன்"

இவ்வாறு கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அம்பலாங்கொடையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றினர். அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:

அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய ஜனதிபதி ஜே. ஆர்., தாம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டால் பத்து வருடங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்படமாட்டாது என்று கூறியுள்ளார். அத்துடன் எதிர்க்கட்சிகளையும் இல்லாமல் செய்வதாகத் தெரிவித்துள்ளார். எனவே மக்கள் திரு ஜயவர்த்தனவை இவ்வாறு சர்வாதிகாரப் போக்கில் செல்ல அனுமதிக்கக்கூடாது.

1978ம் ஆண்டு தற்போதைய அரசாங்கம் கொண்டுவந்த அரசியலமைப்பினுல் பாராளுமன்ற அதிகாரங்களை ஜனதிபதி பெற்றுள்ளார், இதனுல் சுதந்திரமாக வாக்களிக்கும் முறையும் பலவீனமடைந்துள்ளது.

ஜனதிபதிப்பதவி எனக்குக் கிடைக்கும்பட்சத்தில் மக்களின் ஜனநாயக உரிமைகளை எப்போதும் பாதுகாக்கும் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவேன்" என்ருர். (சி)

# தமிழ்மக்கள் அச்சமின்றி வாழ வழிசெய்க!

(கொழும்பு)

"எப்பொழுது கைது செய்யப்பட்டு சித்திரவதைசெய்யப்படுவோமோ, பயங்கரவாத சட்டத்தின் கீழ் இம்சைப்படுவோமோ, தார்மீக ஆட்சியில் எப்பொழுது மரணமடைவோமோ என்று அச்சத்தோடு இந்த நாட்டில் தமிழ் மக்கள் வாழுகின்றநிலைமையை நீக்கி, அகற்றி இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையே வேற்றுமை இன்றியும். சுதந்திரமாகவும், அச்சமின்றியும் வாழ ஆக்கரீதியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்".

இவ்வாருன கோரிக்கையை தேசிய தமிழ் விவகாரமன்றம் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ளது. மன்றத்தலைவர் திரு வி. மாணிக்கவாசகர், செயலாளர் திரு. ஜே. கே. ரட்ணுனந்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி உள்ளனர். இம்மகஜரில்மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"தங்களின் தலைமையில் இயங்கும் ஐ. தே. க. கடந்த 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பெரும் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்ததும் இனங்களுக்கு இடையே பரஸ்பர ஒற்றுமையையும், தீவிர ஒத்துழைப்பையும் பெற்று பொருளாதாரஅபிவிருத்தியைக்கட்டி அமைப்பதாகக் கூறியிருந்தீர்கள். அதனை ஆவலுடன் எதிர்பார்த்தோம். உங்கள் தலைமை, வழிகாட்டலில் தமிழ்மக்களின் சகல பிரச்னைகளுக்கும் விடிவு பிறக்குமென்று நம்பினேம். எமது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் படிப்படியாக மறைந்துவருகின்றன".

"குறிப்பாக வடபகுதியில் வாழும் தமிழ்மக்கள் அன்னியரின் ஆட்சியில்கூட இல்லாத பாதுகாப்பற்ற நிலைமையில் எத்தனையோகொடுமைகளுக்கு சமீப காலங்களில் இலக்காகியுள்ளனர்".

"பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தின் மூலம் அளிக்கவோ ஒழிக்கவோமுடியாது. பலாத்காரத்தை அகற்ற வலுமையான சட்டங்கள் அவசியமே ஆனுல் வடபகுதித் தமிழர்களை மிரட்டும்பயங்கரவாத தடைச்சட்டங்கள் கேட்டுக் கேள்வி இன்றி அவர்களைச்சித்திரவதை செய்வது, உயிரைக் குடிப்பது, உடமைகளை அழிப்பது போன்ற தமிழ் மக்களை அச்சுறுத்துகின்ற அவலநிலைமைக்கு உள்ளாக்கியிருப்பது வேதனைக்குரியதாகும்".

இலங்கை வாழ் தமிழினத்தின் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வுதான் வேண்டும். தமிழ் இனத்தவர்கள் மிகவும் அமைதியானவர்கள். கடுமையான உழைப்பாளிகள். சட்டத்தையும் அமைதியையும் பேணி குற்றச்செயல்களில் ஈடுபடாது இந்த நாட்டில் கடந்த அரை நூற்றுண்டுகளாக வாழ்ந்து வருகின்றுர்கள். இன்று இவ்வினத்தவர்கள் மீதுதான் அவர்களுக்கெதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. பயங்கரவாதச் சட்டம் போன்ற ஆபத்தான சட்டங்கள் கொடுமை செய்கின்றன".

"தமிழ் இனத்தின் உயிருக்கும், உடமைகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாகவும். விரக்தி மன நிலைக்கு இட்டுச்செல்வதாகவும் உள்ள அடக்குமுறைகளையும் பயங்கரவாதசட்டங்களை எவ்வளவு விரைவாகநீக்க முடியுமோ அவ்வளவு விரைவாக நீக்கி தமிழ்மக்களுக்கு உரியபிரச்னைகளுக்கு நிலையான தீர்வை ஏற்படுத்தி சுதந்திரமாக வாழும் நிலையை ஏற்படுத்துங்கள்".

## யாழ். பல்கலைக்கழகத்தில்

# வர்த்தக - முகாமைத்துவ கல்வித்துறை வேண்டும்

### மாணவர் அவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவக் கல்வித்துறைக்குத் தனிப்பிரிவு அமைத்துத் தருமாறு கோரி ஜனதிபதியும் உயர் கல்வி அமைச்சருமான திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது

இம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிள்ளதாவது:

'இந்தவருடம்முதல் தடவையாக யாழ் பல்கலைக்கழகத்துக்கு தமிழ் மொழிமூலம் முகாமைத்துவ வர்த்தககல்விப் பிரிவுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இதேபோன்று ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கும் இதே கல்விப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் சிறப்பாக இக்கல்வியை தொடரமுடிகின்றது. ஆனல் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு இல்லை"

"ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த 2ம் வருட முகாமைத்துவ வர்த்தகக் கல்வித்துறை தமிழ் மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழகத்து இவ்வருடம் மாற்றப்பட்டுள்ளார்கள்"

"யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ வர்த்தக் கல்வித்துறை மாணவர்கள் கலைத்துறைப்பட்டத்தைபெற ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் விஞ்ஞானத்துறை பட்டத்தை பெறுகின்ருர்கள். இத்தகைய பாரபட்சத்தை நீக்கி தமிழ்மாணவர்களும் சிங்கள மொழி மாணவர்களும் முகாமைத்துவ வர்த்தக கல்வித்துறையில் ஒரே பட்டத்தைப்பெற வழி செய்ய வேண்டும்"

## தீர்த்தக்கேணி

(கிளிநொச்சி]

உருத்திரபுரம் 10 ம் வாய்க்கால் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் புதிய தீர்த்தக்கேணி ஒன்றை அமைக்கும் வேலையை உருத்திரபுரம் கிராமோதய சபையினர் கிளிநொச்சிப்பகுதியில் உள்ள பொதுஸ்தபனங்களின் உதவியுடன் மேற்கொண்டனர்.

பிரஸ்த்தாப சபையின் தலைவர் திரு. கா. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கிளிநொச்சிப் பிரதேச சபைத் தலைவர் திரு. என். சுப்பிரமணியம் விசேஷ சேவை உத்தியோகஸ்தர்கள் திருவாளர்கள் எஸ் யோகேந்திரன், கே. தர்மதேவன், ஆனந்தபுரம் கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர் திரு சூரியமூர்த்தி சாந்தன், கிளிநொச்சிப் பிரதேச மாணவர் ஒன்றிய அமைப்பாளர் திரு. ரி தர்மானந்தசிவம் உட்பட பலர் கலந்து கொண்டனர். 8ம் வாய்க்கால் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தினரும் கலந்து கொண்டனர்.

## கீழ்க்கரவையில் இன்று

[கரவெட்டி]

கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூக நிலைய மண்டபத் திறப்பு விழா இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி சி செல்லையா தலைமையில் நடைபெறும் இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாக உடுப்பிட்டி எம். பி திரு. த. இராசலிங்கம், யாழ். மாவட்ட சபைத்தலைவர் திரு. சு. நடராசா, அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, மாவட்ட சபை உறுப்பினர் திரு. தம்பிமுத்து, ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரீ. கே. என். திலகன் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [அ]

## ஞாபகார்த்தப் பேருரை

யாழ்ப்பாணம்]

தந்தை செல்வா ஞாபகார்த்த நம்பிக்கைச் சபையின் ஆதரவில் இன்று புதன் மாலை சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஞாபகார்த்தப்பேருரை நிகழும்.

கேரள எம். ரி. மறைக் கல்லூரி அதிபர். டாக்டர் கே. வி மத்தியு பேருரையை நிகழ்த்துவார். திரு. கே.நேசையா தலைமை வகிப்பார். (கெ)


றெபின் வழங்கும் 3 சக்திமிகு ஜெனரேட்டர்கள்.

- ★ நிகரற்ற தன்னியக்க எரிபொருள் மாற்றுச் சாதனம். வீண் விரயத்தை முற்ருகத் தவிர்க்கிறது.
- ★ கையடக்கமானவை, பொருத்துவது சுலபம்.
- ★ நிலையான சக்தியூட்டும் தன்னியக்க வோல்ட்டேஜ் ரெகியூலேட்டர்.
- ★ உறுதியான அமைப்பு, நீடித்த பாவனைக்கு உத்தரவாதமளிக்கிறது.



றெபின் ஜெனரேட்டர்கள், எமது கைதேர்ந்த தொழில் நுட்ப அனுபவத்தையும் பராமரிப்புச் சேவையையும் பக்கபலமாகக் கொண்டவை.

தொழில்நுட்ப உற்பத்திக்கு இன்றியமையாதது தொழிற்நுட்ப அனுபவம்.

Robin

- ★ 1.0 KVA சிங்கிள் :.பேஸ் ரூபா 10,500/-
- ★ 1.5 KVA சிங்கிள் :.பேஸ் ரூபா 13,125/-
- ★ 3 KVA சிங்கிள் :.பேஸ் ரூபா 16,500/-

ஜினசேன லிமிட்டெட்,
4, ஹுனுப்பிட்டிய ரோட்,
கொழும்பு 2. தொலைபேசி: 26558/9

''இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

# தமிழ்இனத்தின் நலனிலும் அக்கறையுடன் செயல்படுகிறது

## தொழிற்சங்க கருத்தரங்கில் கருத்து

[யாழ்ப்பாணம்]

''இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், தனது அங்கத்தவர்களின் நலனுக்கு உரிமைக் குரல் கொடுப்பதைவிட தமிழினத்தின் நலனிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு ருகின்றது. இதனுல் இத் தொழிற் சங்கம் இலங்கையில் செயல்படும் தொழிற் சங்கங்களைக் காட்டிலும் பிரபல்யம்பெற்று விளங்குகின்றது''

இவ்வாறு சர்வதேச சுதந்திர ஆசிரியர்சங்க சம்மேளனம் 'ப்ரெடரிக் ஈபேர்ட்' மன்றம இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம ஆகியன இணைந்து நடாத்தும் ''இலங்கையில்ஆசிரிய தொழிற் சங்கங்களின் டங்கு'' என்னும் தலைப்பிலான ஐந்துநாள் கருத்தரங்கைஆரம்பித்து வைத்து உரையாற்றிய கலைத்திணைக்கள கணக்காளர் திரு. ராஜ்சுப்பிரமணியம்குறிப்பிட்டார்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில்நடைபெற்ற இக்கருத்தரங்கிற்குஇலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க துணைத் தலைவர் திரு. ஏ. முத்தையா தலைமைதாங்கிஞர்.

திரு ராஜ் சுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''இலங்கையில் திருப்தியான கல்விமுறையொன்றை உருவாக்குவதற்தே அரசு விருப்புகின்றது. இதற்காகவே திருப்தியான கல்விச் சமூகமொன்றை உருவாகும் பணியில் ஈடுபடுகின்றது திருப்தியான கல்விச் சமூகத்தை அமைப்பதற்கு ஆசிரியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இக்குழுவுக்கு தொழிற் சங்கங்கள் கொடுக்கும் அடிப்படையான கருத்துக்களை வைத்தே அது செயல்படவுள்ளது

''இங்கிருந்து வெளி நாடு செல்லும் ஆசிரியர்களின் எண்ணிக்கை – புதிய நியமனம் பதவிஉயர்வு-புலமைப் பரிசில் ஆகியவற்றில் சரியான புள்ளி விபரங்கள் மாவட்ட ரீதியாக மாதாமாதம் திரட்டப்பட வேண்டும். இதன் அடிப்படையில் உங்கள் கோரிக்கைகளைச் சுலபமாக வென்றெடுக்கமுடியும்'' என்ருர்.

யாழ். பிரதம கல்வியதிகாரி திரு சபாநாயகம், ஊர்காவற்றுறைத் தொகுதி கொத்தணி பாடசாலை அதிபர் தி. எஸ். இராசநாயகம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. அ. இராமசாமி ஆகியோரும் இக்கருத்தரங்கில் உரையாற்றினர். (கெ–வெ)

# விவசாயப் போட்டி நடத்த கிராமோதயசபை தீர்மானம்

ரெவெட்டி

கரணவாய் வடக்கில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கமாக விவசாயிகளிடையே விவசாயப் போட்டியொன்றை நடத்துவதற்குக் கரணவாய் வடக்குக் கிராமோதய சபை தீர்மானித்துள்ளது.

இக்கிராமோதய சபையின் கூட்டம் கிராமோதய சபைத் தலைவர் திரு ஆ. க. மாணிக்கம் தலைமையில் கரணவாய் தாமோதர வித்தியாசாலையில் நடைபெற்றபோது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

பிரஸ்தாப கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது:

''நவிண்டில் உப அஞ்சல் அலுவலகத்திற்கு தொலைபேசித் தொடர்பை இணைத்தல்:

''கரணவாய் வடக்கில் சீர்கேடான நிலையில் கிடக்கும் வீதிகளைச் சீரமைத்தல்.

''கரணவாய் தாமோதர வித்தியாலயத்திற்கு நிரந்தர கட்டிடம் ஒன்றினை அமைத்தல்.

''மின் இணைப்புக்குரிய செலவை ஒவ்வொரு மாதமும் கணக்கிட்டுப் பிரதான குடியிருப்பாளரிடம் பெறவசதி செய்தல்

''கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் சுற்றுப்புறங்களை இம்மாத இறுதியில் சிரமதானம் மூலம் துப்பரவு செய்தல்'

## மேலதிகலாபம்!

(கரவெட்டி)

தொண்டமாஞறு சந்நிதி உற்சவத்தின் போது நடாத்தப்பட்ட விசேஷ பஸ் சேவையின் மூலம் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச்சாலைக்கு மேலதிக வருமானமாக சுமார் 2 லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

தேர், தீர்த்தம் ஆகிய இரு தினங்களிலும் நடாத்தப்பட்ட பஸ் சேவையின் மூலமே இந்த வருமானம் கிடைத்து இருக்கிறது.

இத்தகவலை வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார், (அ)

# ''6 மாதத்தில் கிராமோதய சபைகள் நிதிவசதிபெறும்''

## பயிற்சிக்கருத்தரங்கில் 'அமிர்'

(மாவிட்டபுரம்)

''அரசாங்கத்தின் நிதியுதவியை மோசடிசெய்யாது சிறப்பாக அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டால் மேலும் மேலும் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வழி பிறக்கும். இதனைக் கிராமோதயசபை உறுப்பினர்கள்உணர வேண்டும் விரைவில் இக்கிராமோதய சபைகள் சட்ட ரீதியாகவும், நிதிவசதிகளுடனும் இயங்கவிருப்பதால் இவற்றைச் சிறப்பாக இயக்கி, கிராமங்களின் அபிவிருத்திக்கு வழி அமைக்கவேண்டும்.

இவ்வாறு வலிவடக்குக் கிராமோதயசபை உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற சமயம் அதில்கலந்துகொண்டு கருத்தரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசியஎதிர்க்கட்சிமுதல்வரும், காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறிஞர்.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''உள்ளூராட்சி மன்றங்களின் கடமைகளை மாற்றி அவற்றிலும் கூடிய அதிகாரங்களைக்கொண்டவையாக இன்று மாவட்ட அபிவிருத்தி சபைகள் கொண்டுவரப்பட்டுள்ளன அதிகாரங்களைப் பரவலாக்கும் மாவட்ட சபை போன்ற அமைப்புகளுக்காகத் தந்தை செல்வா டலதடவை அரசுகளுடன் ஒப்பந்தம்செய்த போதும் சிங்கள மக்களது எதிர்ப்பால் அவை கைவிடப்பட்டன இன்று மாவட்ட அபிவிருத்தி சபை என்ற பெயரில் ஒருவாறு உருப்பெற்றுள்ளது

மாவட்ட அபிவிருத்தி சபையின்கீழ் பிரதேச சபைகளும், கிராமோதய சபைகளும் இயங்கவுள்ளன. இச்சபைகள் விரைவில் சட்டரீதயாக இயங்கவுள்ளன. இன்னும் 6 மாத காலத்தில் கிராமோதய சபைகளுக்கு நிதிவசதிகளும் கிடைக்கவிருக்கின்றன

ஆகவே ஆரம்பக்கட்டத்திலுள்ள இக்கிராமோதய சபைகளை உறுப்பினர்கள் சிறப்பாக வளர்த்தெடுக்கவேண்டும். எல்லாம் அரசாங்கம்செய்யும் என எதிர்பார்த்திருக்காமல் நாமும திட்டங்களைச் செயற்படுத்திச் சுயதேவைகளை பூர்த்திசெய்ய வேண்டும்.

### சோவியத்தில்

சிரமதானம் போன்ற நடவடிக்கைகளால் பல்வேறு தேவைகளை நிறைவேற்றமுடியும். அண்மையில்நான் ரஷ்யா சென்றிருந்த சமயம் அங்கு 40 நாள் சிரமதானத்தில் 140 மைல் வீதியை மக்கள் சிறப்பாக செப்பனிட்டதை அறிய முடிந்தது. ஆனுல் இங்கோ அப்படியான நிலை இல்லை. குளத்தை ஆழமாக்க விட்டால் உதவிப் பொருளாக வழங்கும் மா, சீனி, பருப்பு தீர்ந்துவிடும். ஆனுல் குளம் ஆழமாகாது. இவ்வாருன பல புகார்களும் எனக்குக் கிடைத்திருக்கின்றன. இந்நிலை மாறவேண்டும்.

கிராம மட்டத்தில் ஊழல், மோசடிகளைக் கண்காணிக்கும் சிறந்த அமைப்புக்களாகக் கிராமோதய சபைகள் இயங்க வேண்டும். எமது பகுதிகளில் கிராமோதய சபைகள் குறித்துச் சிக்கல் எதுவும் இல்லை. ஆனுல் இதுபற்றி மக்களுக்குச் சரியாகத் தெரியாமையால் சந்தேகம் எழுகின்றது இந்நிலை விரைவில் தீர்ந்துவிடும்'' என்ருர்.

யாழ். மேலதிக அரச அதிபர் திரு. பி. எல். பற்றிப் பேசுகையில், 'கிராம அபிவிருத்திக்கு வழிவகுக்கக்கூடிய சிறந்த அமைப்புக்களாகக் கிராமோதய சபைகள் இயங்குகின்றன. கிராமமட்டத்தில் அரசாங்க அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களது தேவைக்கேற்ப செயல்படுவதற்கு இச்சபைகள் வழிவகுக்கின்றன. உயர்மட்டத்திலேயிருந்து திட்டங்களை வகுக்காமல் கிராம மக்களின் ஆலோசனைகளைப் பெற்றுத் திட்டங்களை வகுக்க இச்சபைகள் பயன்படுகின்றன. இக்கிராமோதய சபைகள் சிறப்பாக இயங்கும் நிலை ஏற்படும் போது கிராம மறுமலர்ச்சி தாஞகவே ஏற்படும்' என்ருர். மற்றும் பலரும் பேசினர். (அ)

## 100 ரூபா போலி நோட்டு இருவர் கைது

(கண்டி)

கண்டியிலுள்ள ஹோட்டலொன்றில் 100 ரூபா போலி நோட்டுக்களை மாற்றமுயன்ற இருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்களை கண்டி நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர்செய்த போது றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதுதொடர்பாக இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (செ)

## கடுந்தாக்குதல்

பெய்ரூட் செப் 14

இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று முன்தினம் ஏழு மணித்தியாலங்கள் மத்திய லெபனுனின் சிரிய, பாலஸ்தீன நிலைகளில் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதலினுல் பலர் கொல்லப்பட்டிருப்பதுடன் அநேகர் காயமடைந்துள்ளன ரென்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாலஸ்தீன கெரில்லாக்களின் வெளியேற்றத்தை மேற்பார்வை செய்த 850 பிரஞ்சு பாரசூட்படைப் பிரிவு வீரர்கள் நேற்று முன்தினம் தாயகம் திரும்பினர். இவர்களுடன் பணியாற்றிய இத்தாலிய வீரர்களும் நாடு திரும்பியுள்ளனர். (கி)

# 'பதவிஇழந்தஊழியர்களுக்கு எவ்வித நிவாரணமுமில்லை'

## – காவலூர் எம். பி.

[கொழும்பு]

''1980 ஐப்பசி மாதம் 11ம் திகதி தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் சிங்களத் தேர்ச்சி பற்றிய சுற்றறிக்கை ஒன்றை அரசு வெளியிட்டது. இச் சுற்றறிக்கை சிங்களத் தேர்ச்சிபெருமல் கடமையாற்றி வந்த உத்தியோகத்தர் பலருக்குப் பதவியில் இருந்து ஒய்வுபெற்று ஒய்வுச் சம்பளம்பெற வழிவகுத்தது. எனினும் சுற்றறிக்கை வெளியிட்ட சில ஆண்டுகளாக சிங்கள மொழித் தேர்ச்சியின்மையால் உத்தியோகத்தினின்றும் விலக்கப்பட்ட தமிழ் அரச உத்தியோகத்தர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

உணவு உற்பத்தி சேவையாளர், கிராமசேவை அலுவலர், நெசவு ஆசிரியர்கள் முதலிய பலர் பலவருடங்கள் சேவைசெய்தபின் எவ்விதமான நிவாரணமுமின்றி பதவியிலிருந்தும் நீக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் அவலநிலைகுறித்து அரசாங்கத்துக்கும் அமைச்சர்களான திரு. எஸ் இராசதுரை, திரு கே. டபிள்யு தேவநாயகம் போன்ருேருக்கு அளித்த முறைப்பாடுகள் எவ்வித பயனும் அளிக்கவில்லை''

கடந்தவாரம் நடைபெற்ற அரசாங்க நிர்வாக அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வேலையிலிருந்தும் நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைச் சுட்டிக்காட்டி இவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென வற்புறுத்திஞர்.

இக் குழுவுக்கு தலைமைதாங்கிய அமைச்சர் திரு மொண்டேகு ஜயவிக்ரம, இவ்விஷயம் அமைச்சரவையினுல் தான் முடிவுசெய்யப்படவேண்டுமெனவும், அமைச்சரவைக்கு இவ்விஷயம்பற்றிய அமைச்சரவை பத்திரத்தை தமது அமைச்சு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவித்தனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் முழுவிபரங்களையும் திரட்டித்தருமாறு அமைச்சர் ஊர்காவற்றுறை எம். பியைக் கேட்டுள்ளார். [மா]

## ''சோயா உணவு தயாரிப்பு மூலம் சுய தொழில் வாய்ப்புண்டு''

[சாவகச்சேரி]

சாவகச்சேரியில் சோயா அவரையிலிருந்து போஷாக்கான உணவுகளைச் செய்து காட்டும் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்றது

இச் செய்முறை பயிற்சியை கன்னெறுவா சோயா உணவு ஆய்வுநிலையப் பொறுப்பதிகாரி செல்வி எவன் ஜயவர்த்தன செய்து காண்பித்தார்.

சாவகச்சேரி பல. நோ. கூ. சங்க மகளிர் குழுத்தலைவி, திருமதி மகிந்தா தலைமையில் இடம்பெற்ற இச் செய்முறை பயிற்சியில் புரதம் முழுவதையும் சிதையாது பயன்படுத்தி, இடியப்பம், பிட்டு, பவோடா மிக்சர், முறுக்கு, பால், இறைச்சி, சோயாப் பருப்புக் கறி ஆகிய உணவு பொருட்கள் செய்து காண்பிக்கப்பட்டன!

மகளிர்குழுத்தலைவி திருமதி மகிந்தாபேசுகையில், ''சோயா அவரையிலிருந்து கிராமிய மட்டத்தில் சாதாரண உபகரணங்களைக்கொண்டு ஊட்டச்சத்து அழிக்கப்படாது செய்யப்பட்ட இந்த உணவுச் செய்முறைப் பயிற்சி சுய தொழில் வாய்ப்புகளையும், பொருளாதார வளர்ச்சியையும், ருசியான நிறைஉணவையும் பெறக்கூடிய வாய்ப்புகளை உள்ளடக்கியதாக உள்ளது'' என்ருர்.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு எஸ். வி. வைத்திலிங்கம், முதியோர் கல்வி அதிகாரி திரு. சீ. சுப்பிரமணியம், யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், கெயர்நிறுவனப் பிரதிநிதிகள் திருமதி பரணவித்தன அவரது பாரியார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பத்மநாதனுக்கு பாராட்டு விழா

(கொழும்பு

நாதஸ்வரமேதை அளவெட்டி திரு. என். கே. பத்மநாதனுக்குப் பாராட்டுவிழாவும் இராப்போசன விருந்தும் நாளை வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு பம்பலப்பிட்டி கிரீன்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

## இலக்கிய வட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் இலக்கியக்கூட்டம் 17-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள பொண்ட் கல்வி நிலையத்தில் நிகழ்கின்றது. திரு ஏ. ரி பொன்னுத்துரை தலைமையில் திரு. கே டானியல், திரு. நா சுப்பிரமணிய ஐயர், திரு செம்பியன் செல்வன் ஆகியோர் 'இன்றைய இலக்கியப் போக்குகள்' என்ற பொருளில் கருத்துரை வழங்குவார். (ப)


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6–15, 9–30
சனி, ஞாயிறு 2–30
ஞானக்குழந்தை

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ
[யாழ்ப்பாணம்] தினசரி 10–30, 2–15, 4–45, 7–15, 9–30
DEATH DIAMENTION

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

நீகல் [யாழ்.நகர்]
Daily 5 Shows
From 15-9-82
MAN FROM HONGKONG
(Adults only)

சாந்தி (யாழ்.நகர்) 14—15
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.ஜெயலலிதா
நீதிக்குத் தலைவணங்கு
(புதிய பிரதி)

ராணி (யாழ் நகர்) இன்று 75வது தினம்
தவிர்க்கமுடியாத ஜனத்திரள் காரணமாக நீடிக்கப் ட்டுள்ளது. அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
10–30, 2–15, 4–45, 7–15, 9–30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

5-வது மகளிர் வாரம்
வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ சந்திரசேகர் ★ சுஜாசினி ★ ராஜீவ் நடித்த
பாலைவனச்சோலை
இசை; சங்கர் கணேஷ் (கலர்)


# மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களை உலகவங்கி ஏற்றது!

(மன்னார்)

ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பல அபிவிருத்தித் திட்டங்களை உலக வங்கி நிபுணர்கள் ஏற்றுக்கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் 400கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உலக வங்கி நிபுணர்களிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டது.

இந்த திட்டங்கள் பற்றி மேலும் பரிசீலனை நடத்தும் பொருட்டு உலக வங்கி நிபுணர்கள் மன்னார் கச்சேரியில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து 3 நாட்கள் கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினர்.

இக்கலந்துரையாடலில் உலக வங்கி நிபுணர் குழுவுடன் மன்னார் எம்.பி திரு. பி. எஸ். சூசைதாசன், பனம்பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. நடராசா, மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் எம்.ஈ.எச்.மஹ்ரூப், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை, மன்னார் அரசாங்க அதிபர் திரு டி வாமதேவன் நீர்ப்பாசன பணிப்பாளர் திரு. பொன்ராசா, வவனியா சுகாதார அத்தியட்சகர் திரு. வேலும்மயிலும், மன்னார்மேலதிக அரசாங்க அதிபர் ள் திரு. ஏ ஜே செந்திளநாதன், ஜனாப் எம் எம்.மக்பூல், மன்னார் மாவட்ட அபிவிருத்தி உறுப்பினர்கள் திரு. வி. கைலாசபிள்ளை, ஜனாப் எஸ் கே. சாகுல் ஹமீது, மன்னார் திட்டமிடல் பணிப்பாளர் திரு எஸ். தீவகலால், திட்டமிடல் அதிகாரி திரு. ரி இராசநாயகம், மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. வைரமுத்து, அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகையா, நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், மன்னார் மாவட்ட அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் ஜனாப் கே. அக்பர். மாந்தைபிரதேச சபை தலைவர் திரு. எஸ். சௌந்தரநாயகம், மன்னார் பிரதேச சபை தலைவர் ஜனாப் எஸ் ஏ. கபூர் மற்றும் திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகளும், திணைக்களத் தலைவர்களும் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி பற்றி 4 குழுக்கள் நியமிக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

நீர்ப்பாசனம், விவசாயம், மிருக வளப்பு ஒருபகுதியாகவும், மீன்பிடி ஒருபகுதியாகவும், கல்வி, சுகாதாரம் ஒரு பகுதியாகவும், கிராமியகைத்தொழில் ஒரு பகுதியாகவும் பிரிக்கப்பட்டு தனிததனியே பரிசீலனை செய்யப்பட்டன.

ஒன்றிணைந்து கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் 5 வருடத்தில் மன்னார் மாவட்டம் பூரணமாக அபிவிருத்தியடைந்து விடுமென இக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டட்டது.

உலகவங்கி நிபுணர்கள் கூராய், கட்டுக்கரை, அகத்தி, பறங்கியாறு போன்ற நீர்த்தேக்கங்களையும், கடல் பிரதேசங்களையும் பெருந்தெருக்கள் போன்றவற்றை நேரடியாகச் சென்றுபார்வையிட்டனர்.

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 7-ம் ஆண்டு மிருதங்கம், நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். நடனம் — பரதம் முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

## நடனம்-பரதம்

### யாழ்ப்பாணம்

### முதலாம் பகுதி

### முதலாம் பிரிவு

### பரதம்

வாசுகி இராஜேந்திரன், சுகன்யா பொன்னையா, பொற்செல்வி பொன்னுத்துரை, கவிதா பொன்னையா, வனஜராணி கண்ணுத்துரை, மஞ்சுளாதேவி குருசாமி, வலிதா தேவி பொன்னையா, பாமினி பேரம்பலம், உமையாள் மகேசன், சாமினி சச்சிதானந்தன், பாமினி சச்சிதானந்தன்' லக்ஷாயினி செபஸ்ரியன், நிஷானி சபீனு பிலிப்ஸ், செறீன் நிகாரா தம்பையாப்பிள்ளை, தனுஜா பாலச்சந்திரன், சுபாஷினி புவனசுந்தரராஜா, பவானி சோமசுந்தரம், ஆனந்தி சகாதேவன், இந்திராதேவி குமாரசிங்கம், விமலாதேவி குமாரசிங்கம், ராசலட்சுமி பரராசகிங்கம். விஜயலட்சுமி பரராசசிங்கம், சுடர்விழி அருள்லிங்கம், அருள்விழி அருள்லிங்கம், ஆரணி சற்குணம், ஜெயசந்திராஜெயரத்தினம், வாசுகி முருகானந்தமூர்த்தி, அகல்யா ஜெயரட்ணம், தமயந்தி பரமசாமி, சோபிதா தர்மரட்னம், சுஜாதா நகுலேஸ்வரன், கிருஷாந்தி சிவசுப்பிரமணியம், பத்மநாதன் ராகவன், பிரபாகரன் சசிகுமார், சுதாஷினி கந்தையா, கௌசலாதேவி பழனியாண்டி, பவளராணி வடிவேலு, அனிற்ரு லோகினி வில்லியம், அனிந்திகா பத்மநாதன், நிவேதித்தா ராஜரட்ணம், கஸ்தூரி முருகையா, பிரவாஹினி லோகேஸ்வரன், நிர்மலி மனுவேல்பிள்ளை.

### இரண்டாம் பிரிவு

சுபோதினி மகாலிங்கம், ஷகிலா தனசேகரம், டொறீன் அருஷினி மரியாம்பிள்ளை, யூடித் நீலிக்கா பஸ்ரியாம்பிள்ளை, தேவதாரிணி துரைராஜா, மாதினி மதனசேகரம், துஷ்யந்தி மயில்வாகனம், ராதிகா நாகநாயகம், சிறிபிறேமா சுப்பிரமணியம், இந்துமதி சண்முகநாதன், சசிகலா இராசசுந்தரம், தேவயோகராணி இராசையா, மீரா சண்முகநாதன், றஞ்சினி நடராசா, நந்தினி நடராசா, கிறிஷா ஜேசுதாசன், நிறஞ்சனி சுந்தரலிங்கம், வாசுகி திருவிளங்கம், சுரபி சுந்தரலிங்கம், லாஈசா கணேசன், நிம்மியா கைரு தனபாலசிங்கம், நளினி நடராஜா, நிரஞ்சலா சுப்பிரமணியம், அமிர்தினி ஜோன். சசிலலா நாகராசா, C) வினித்தா பிரான்சிஸ், (D) அனிற்ரு சிறிஷாந்தினி பற்றிக் இம்மானுவல்.

### சாதாரணசித்தி

ரஜி புஸ்பராஜா. லோகினி இராஜகோபால், கயல்விழி இராமலிங்கம், மேபிள் பெர்ஞன் டோ, கோபினி ஞேமோளா கார்த்திகேசு. இராஜசூயா இராஜகோபாலன். விக்னேஸ்வரி குணரத்தினம், சிவகாமி யோகசேகரம் லக்ஷ்மி நரேந்திரா, சாந்தி பிரபாகரன். சைலாணி சுப்பிரமணியம்.

### நல்லூர்

### முதலாம் பகுதி

### முதலாம் பிரிவு

பாமதி நித்தியானந்தன், காயத்திரி முத்துக்குமாரசாமி, ருக்மா சிவசுந்தரம். திருமகள் மகேசன், ரேணுகா குணராஜா, லதாமதி சந்திரசேகரம். சாந்திமதி சரவணமுத்து.

### இரண்டாம் பிரிவு

கௌசல்யா சுந்தரலிங்கம், தாஞ்சலி இராஜகோபாலன், மஞ்சுளா இராசையா, ஸ்டெலா சாந்தி இராசேந்திரம், சைலஜா சிவசுப்பிரமணியம், ஈஸ்வரப்பிரியா கணேசலிங்கம், சசிலேகா இராமகிருஷ்ணசர்மா, நிரஞ்சனு சோமசுந்தரம், சுஜாதா சோமசுந்தரம்.

### சாதாரணசித்தி

சசிகலா புவனேஸ்வரன், சியாமா சிவசுந்தரம், பத்மலோசனி சுப்பிரமணியம், பாலேந்திரராணி ஆறுமுகம், சுதா இராசகிளி, சுபத்ரா கிருஷ்ணசிங்கம், தேன்மொழி சண்முகலிங்கம், பிரோமா சுந்தரலிங்கம்.

## நல்லூர்

### முதலாம்பகுதி

### சாதாரணசித்தி

விஜித்தா கனகரத்தினம், ஹனிசா நல்லதம்பி, கலைமதி ஜெகதீசன், சுரபி நவரத்தினம, சுபைதா பூபாலசுந்தரம், பானுமதி பானுதேவன், சிவலோசனி சிவசுப்பிரமணியம், மனோகரி சிவசுப்பிரமணியம், மதியழகி பாலசிங்கம், யசோதா துரைரட்ணம், பிரியதர்ஷினி பாலசுந்தரம், குலறஞ்சனி தர்மலிங்கம், யமுனு சதாசிவம், சாந்தி சண்முகராசா, அனுராதா நல்லையா, விக்னேஸ்வரி சரவணமுத்து, ஹரிதாநந்தினி ஹரிஹரசர்மா கீதா ஹரிஹரசர்மா, நர்மதா நடராஜா, அனுஷா ஜெயராஜா, சிவாஜினி இராஜகோபால், கோமதி கந்தையா, அருணு சிவலிங்கம், சுபத்திராதேவி இரட்னசிங்கம், சிவராஜினி யோகராஜா, சூரியகலா அருளாளந்தம், பவானி காசிப்பிள்ளை, தர்சினி வடிவேலு, பிரதாயினி செல்வபாஸ்கரன், சுதர்சினி திருஞானசம்பந்தன்,

## மானிப்பாய்

### முதலாம்பகுதி

### முதலாம்பிரிவு

செல்வாம்பிகை செல்வராஜா, சாமினி கந்தையா.

### இரண்டாம்பிரிவு

சுஜனி கணேசன், சுகந்தி வேலுப்பிள்ளை, தெய்வஞானி பழனியாண்டி, தனுஜா சண்முகநாதஐயர்

### சாதாரணசித்தி

அபிராமி உருத்திரராசா, நிரஞ்ஜனி நடராசா, கமலாம்பாள் செல்வராஜா, சுகந்தி நாகமணி, அனுஷா சிவாசுபிரமணியம், ராதிகா தங்கவேல், மஞ்சுளா கனகசுந்தரம், சியாமினி கணேசலிங்கம், சந்திரரஜனி கணபதிப்பிள்ளை, சுமாலினி சிவசுப்பிரமணிரம்.

## கொக்குவில்

### முதலாம் பகுதி

### முதலாம்பிரிவு

பேபிசசிகலா சுப்பிரமணியம், ஞானசுந்தரி திருஞானசம்பந்தபிள்ளை, தாரிணி நடராசா, றூபகாந்தி செல்வகுருநாதன், சுந்தரவல்லி விவேகானந்தராசா,

### இரண்டாம்பிரிவு

சுபாஷினி சந்திரசேகரா, திருச்செல்வி திருநாவுக்கரசு, அருளரசி நடராசா, பிறேமினி கணேசலிங்கம், சுமதி இராசரெட்ணம், சுபாஜினி ஜெயரட்ணம்

### சாதாரணசித்தி

போபினி இரத்தினசிங்கம், தர்சினி கமலகுமார், வித்தியானந்தி செல்வரத்தினம், தேவகி வேலாயுதபிள்ளை, விமலாவதி மகேஸ்வரன், சாந்தினி நடேசன், தவராஜினி தவராசலிங்கம், நித்தியலட்சுமி சின்னத்துரை, கங்கா பாலதேவன், சுமதி வாமதேவர், பாமதி நாகேஸ்வரசர்மா, சுமித்திரா சண்முகம், ஜெயானந்தி சண்முகநாதன், யோகானந்தி சண்முகநாதன், திலோத்தமி சிவகுமார், சிவசக்தி வைத்தியநாதர், A) சுபாஜினி செல்வராஜா.

## ஊர்காவற்றுறை

### முதலாம்பகுதி

### முதலாம்பிரிவு

கல்யாணி செல்வரத்தினம்.

[8ம் பக்கம் பார்க்க]

## அனலைதீவு நகைக் கொள்ளை:

# சரணடைந்த சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவில் கந்தசாமி தவமணிதேவி என்பவரது வீட்டில் நள்ளிரவில் கத்தி, வாள் பொல்லு, பொய்த்துப்பாக்கி சகிதம் புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் 62,000 ரூபா பெறுமதிவாய்ந்த தங்கநகை களைக் கொள்ளையடித்தனர்.

இக்கொள்ளை தொடர்பாக முக்கிய சந்தேகநபராக ஊர்காவற்றுறைப் பொலிசாரினல் தேடப்பட்ட ருசைப்பிள்ளை மருது வின்சன் என்பவர் ஊர்காவற்றுறைப் பொலிசில் சரணடைந்தார்.

இவரை அடையாளம் காட்டுவதற்காக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்பதில் நீதிபதி திரு. ப. கதிரவேலு முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடை பெற்றது இதில் சந்தேகநபரான ருசைப்பிள்ளை மருது வின்சன் என்பவர் தவமணியினல் அடையாளம் காட்டப்பட்டு, இவர்கள் எனது தாலிக்கொடியை கொண்டுசென்றவர் என்று கூறினர்.

இவ்வழக்கில் ஏற்கனவே கடந்த 7ம் திகதி ஓர் அடையாள அணிவகுப்பு பதில் நீதிபதி திரு. ப. கதிரவேலு முன்னிலையில் நடைபெற்றது இதில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும் சந்தேக நபர்களில் ஒருவர் தவமணியினல் அடையாளம் காட்டப்பட்டார் சந்தேக நபர்களான ருசைப்பிள்ளை மருது வின்சன், கந்தசாமி செல்வநாயகம், சாம்பசிவம் யோகராசா, சிவகம்பு குமர குரு, நடராசா இந்திரபாலன் ஆகியோரை செம்மாதம் 21ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி பதில் நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களின் சார்பில் சட்டத்தரணி இ. சபேசன் சட்டத்தரணி செல்வி. தேவி இராயப்புவின் அனுசரணையுடன் ஆஜரானர்.

## வல்லை முக்கொலை வழக்கு: எதிரி பிணையில் அனுமதி

(புலோலி)

வல்லை முக்கொலை வழக்கின் எதிரியான கே. தவசேகரத்தை யும் பிணையில் செல்வதற்கு யாழ் மேல்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பிணையில் விடுமாறு கோரி யாழ். மேல்நீதிமன்றத்தில் பிணைமனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

மேல்நீதிமன்றம் இப்பிணை மனுமீதான விசாரணையை மேற்கொண்டு எதிரியான தவசேகரத்தை 5000 ரூபா பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கி சாட்சிகளுக்கு எதிரி எதுவிதமான இடைஞ்சல்களோ, கஷ்டங்களோ ஏற்படுத்தக்கூடாதென்றும், ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் பொலிஸ்நிலையம் சென்றுகைச்சாத்திடவேண்டுமென்றும்உத்தரவு பிறப்பித்தது.

இதனைத்தொடர்ந்து எதிரி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில்விடப்பட்டுள்ளார்.

## இன்று அடிக்கல் நாட்டு விழா

[காரைநகர்]

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனர் வித்தியாசாலை புதிய இருமாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று புதன்கிழமை நண்பகல் நடைபெறுகிறது. யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் அடிக்கல்லை நாட்டுவார். [அ]

## வடஇலங்கை

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

**இரண்டாம்பிரிவு**

சிவகுமாரி தர்மலிங்கம், புஷ்பராணி நடராசா, சிவரூபி இராசதுரை, தவராணி சிவாகராசா, சௌந்தராம்பிகை தியாகராசா

**சாதாரணசித்தி**

பூங்குலரூபி பாலசிங்கம், விக்னேஸ்வரி பத்மநாதன், ஞானம்பாள் சுப்பிரமணியம், சிவலோகநாயகி பரமசாமி, கலாரஞ்சினி மகாதேவன், மீனலோசனி யோகலிங்கம், பூங்குலவதனி பூபாலசிங்கம், தயாநிதி பொன்னுத்துரை, புஸ்பராணி மகாதேவன்.

(தொடரும்)

## சென்னை வீதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பணத்தை முகவர் நிலையத்தாருக்குக் கட்டியதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இருந்த காற்சட்டை, ஷேர்ட்டுகளை விற்றுச் சாப்பிட்டும் சாப்பிடாமலும், சென்னையில் சீவித்துவந்ததாகக்கூறிய இவர்கள் இப்போது வீதிகளில் அலைந்துகொண்டிருப்பதாக கூறியகதை பரிதாபமாகவிருந்தது.

பல்லுத் தீட்டும் 'ருத் பிரஷை'க்கூட காலைத் தேநீருக்காக விற்ற கதைகளையும் கவலையோடு கூறினர்கள்.

கொழும்பில் இவர்களிடம் பணம் பெற்ற முகவர் நிலையம் மூடப்பட்டுள்ளதாகவும், முகவர் நிலைம உரிமையாளர் தலைமறைவாகிவிட்டதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

(இ)

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம்

எழுப்புதல் கூட்டங்கள்

75-ம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தினல், செப்டெம்பர், 16, 17, 18-ம் திகதிகளில் நடைபெறவிருந்த எழுப்புதல் கூட்டங்களும், 18-ம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட 75-ம் ஆண்டு நிறைவுவிழாவை ஒட்டிய பகிரங்கக் கூட்டமும், தவிர்க்கமுடியாத காரணத்தினல் பின்போடப்பட்டுள்ளது. இதற்காக வருந்துகிறோம். திகதி நியமனமானதும் பின்னல் அறிவிக்கப்படும்.

யோ. சர்வானந்தன்
காரியதரிசி

4527

பொன்னலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள்.
ஆலயத் தேர்த் திருப்பணிக்காக 12 - 09 - 82
அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட

சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| 1-ம் பரிசு | N 513 |
| 2-ம் பரிசு | J 189 |
| 3-ம் பரிசு | E 245 |
| 4-ம் பரிசு | D 190 |
| 5-ம் பரிசு | I 274 |

ஆறுதற் பரிசுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | D | 734 | (11) | M | 816 |
| (2) | D | 365 | (12) | M | 848 |
| (3) | D | 691 | (13 | I | [illegible]47 |
| (4) | F | 029 | (14) | C | 606 |
| (5) | I | 126 | (15) | N | 792 |
| (6) | G | 379 | (16) | I | 443 |
| (7) | K | 537 | (17) | O | 970 |
| (8) | G | 958 | (18) | F | 487 |
| (9) | C | 811 | (19) | A | 653 |
| (10) | B | 469 | (20) | L | 1[illegible]1 |

மேற்படி இலக்க டிக்கட்டுகளுக்கான பரிசுகள் 19-9-82 மாலை 4 மணிக்கு தேவஸ்தான முன்றலில் வழங்கப்படும்.

இங்ஙனம்
தேர்த்திருப்பணிச்சபை.

4525

## அதிபர் சிவநாதபிள்ளை

அமரத்துவம் அடைந்த சிவநாதபிள்ளை மாஸ்டர், அதிபர் என்றே எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவர்.

''கடமை கண்ணியம் கட்டுப்பாடு தவருது கருமமே கண்ணுக உழைத்தவர்.

கட்டுவன்புலம் வித்தியாலயத்தை மகாவித்தியாலமாகத் தரமுயர்த்த அரும்பாடுபட்டார். அதன்வளர்ச்சியில் பெருமையும் சந்தோஷமுமடைந்தார்

இந்தவித்தியாலத்தின் அதிபராகப் பொறுப்பேற்றகாலம் தொடக்கம், பாடசாலை அபிவிருத்தியில் மட்டுமல்ல மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் இரவு பகலாக ஒய்வுஒழிச்சலின்றி ஈடுபட்டார்

கடந்த ஆகஸ்ட்மாதம் 16ம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள ஒரு கல்லூரியில் நடைபெற்றுவந்த உயர்தரப்பரீட்சைக்குமேற்பார்வையாளராகத் துவிச்சக்கரவண்டியில் சென்ற அதிபர் சிவநாதபிள்ளை, தெல்லிப்பழையில் மாரடைப்பால் காலமானர். ஒருநிமிடமேனும் நோய்வந்து படுத்து அறியாதவா.

திடீரெனப் பிரிந்து சென்றுவிட்டார்.

அதிபர் சிவநாதபிள்ளை. சகலதுறைகளிலும் சிறந்து விளங்கிய ஒரு சர்வகலாவல்லுனர்.

'எழினி' என்றபுனைபெயரில் கவிதைகள் கட்டுரைகள் எழுதினார். சிறுகைத்தொழில்களை வளர்த்தார்.

கட்டுவனில் பிறந்து வளர்ந்து அக்கிராமத்துக்கேபெருமைதேடித் தந்த அவரை இன்று நினைவுகூருவோமாக!

— ஏ. வி. மாணிக்கம்.

## தபால் மூலம் வாக்களிக்க 1, 22, 000 பேர் விண்ணப்பம்

[கொழும்பு]

எதிர்வரும் அக்டோபர் மாதம் 20ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தபால் மூலம்வாக்களிப்பதற்கு சுமார் ஒரு லட்சத்து 22,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி நேற்றுமுன்தினமாகும், [வெ]

## கிளிநொச்சி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய திட்டமாகும்.

கிளிநொச்சி கல்வி வட்டார அதிபர்கள் சங்கத்தினர் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையை சந்தித்து இப்பகுதியின் கல்விகுறைபாடுகளை நிவர்த்திப்பது தொடர்பாக ஆராய்ந்தனர்.

இச்சந்திப்பின்போது பிரஸ்தாப அதிபர் சங்க செயலாளர் திரு. ஏ. கே. இராசேந்திரம், பரந்தன், கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் அ. தங்கராசா, மா. சண்முகநாதன், அதிபர்கள் திரு. பொன். தில்லைநாயகம், திரு. க. சோமசுந்தரம்பிள்ளை, திரு. க. ஆறுமுகதாஸ், திரு. எம. பாரூக் ஆகியோரும் பிரதம கல்வி அதிகாரிகள் திரு. எம்.எம்.மன்சூர், திரு. வே. சபாநாயகம் முதலானேரும் கலந்துகொண்டனர்.

கல்விப் பணிப்பாளருக்கும் அதிபர்கள் சங்கத்தினருக்கும் இடையே இணக்கம் காணப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல், ஒரு ஆசிரியருடன் இயங்கும் இப்பகுதியின் 18 பாடசாலைகளுக்கு மேலும் ஒரு ஆசிரியரை நியமித்தல், தளபாடம் பற்றுக் குறையை நீக்குதல், பூநகரியை தனிக் கல்வி மாவட்டமாக்குதல், பாடசாலைப் பத்திரங்களை யாழ்ப்பாணம் செல்லாமலே கிளிநொச்சி, பளை வட்டாரக் கல்விஅதிகாரிகள் அலுவலகங்களில் பெறல், தற்காலிக அதிபர்களை நிரந்தரமாக்கல், கிளிநொச்சி கஷ்டப் பிரதேசம் என்றபடியால் பதவி உயர்வில் முன்னுரிமை வழங்கல் ஆகியன.

## யாழ்ப்பாண நகரில் சத்சங்க வட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா மலேயகத்தில பல இடங்களிலும் அமைத்து வரும் சத்சங்க வட்டத்தின் யாழ்ப்பாண நகருக்கான அமைப்பை இன்று ஆரம்பித்து வைக்கிறார்.

சைவ மிஷன்சபையின்யாழ்ப்பாண கிளை செயலாளரின் அந்தர்மடத்தில் உள்ள ஆலயத்தில் இந்த நிகழ்ச்சி [illegible] மாலை 6 மணியளவில் [illegible] பெறும்.

இந்த [illegible] சைவ மிஷன் சபை ஆகியவற்றின் [illegible] மற்றும் சமய அபிம னி[illegible] கொள்வர். இதை தொடர்ந்து வடபகுதியில் பல இடங்களிலும் இதன் கிளைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

## குட்டிமணி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அறிக்கை ஒன்[illegible] டிருந்தார். அ[illegible] இக்கடிதத்தை திரு. குமாரலிங்கம் அனுப்பி[illegible] ளார்.

''தங்கள் பத்திரிகை அறிக்கையையும் இன்று (செவ்வாய்) கண்டேன்; அதே நேரத்தில் பனுகொடை இராணுவ முகாமில் உள்ள இளைஞர்களையும் இன்று கண்டேன்'' என்று தமது கடிதத்தை ஆரம்பித்துள்ளார். [இ]

## 'பாஸ்போர்ட்...

(1ம பக்கத் தொடர்ச்சி)

சிதம்பரம், யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா, குடிவரவு-குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலர் உரையாற்றுவர்.

கடந்த மார்ச் மாதம் காலியிலும், ஜூன் மாதத்தில் கண்டியிலும் இந்தப் பிராந்திய கடவுச் சீட்டு அலுவலகங்கள் திறக்கப்பட்டன.

காலி கடவுச்சீட்டு அலுவலகம் இதுவரை 8,800 பாஸ்போர்ட்டுகளையும், கண்டி 7 ஆயிரம் பாஸ்போர்ட்டுகளையும் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில இன்று திறக்கப்படுவது மூன்ருவது அலுவலகமாகும். மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டுமே இங்கு கடவுச் சீட்டுகள் வழங்கப்படும். [மா]

# ஆயுதமுனையில் 10 பெரிய கொள்ளைகளை நடத்தினராம்!

## ஐவர் பொலிஸிடம் சிக்கினர்!!

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய பத்துக்கொள்ளைகளை ஆயுத முனையில் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஐவரைப் பொலிசார் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம, சுன்னுகம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் கொள்ளையடிக்கப்பட்ட பல பொருட்களையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

யாழ். உதவி பொலிஸ் சுப்பிரின்டன் ஜனுப் எம். எஸ். எம், நிஸாமின் உத்தரவைத் தொடர்ந்து யாழ். பொலிஸ் குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் திரு. கமலேஸ்வரன் தலைமையில் சென்றபொலிஸ் கோஷ்டி இந்த ஐவரையும் கைது செய்தது.

தர்மபுரத்தைச்சேர்ந்த பெரியசாமி ராஜேந்திரன், கோண்டாவிலைச் சேர்ந்த நடராசா பரமசிவம், கிளிநொச்சியை சேர்ந்த கறுப்பையா செல்வம், ஏழாலையைச்சேர்ந்த சுப்பையா சபாரத்தினம்' வத்தளையைச்சேர்ந்த ராசு விக்னேஸ்வரன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

சுப்பையா சபாரத்தினத்தைக்கைது செய்தபோது அவருடன் ரவைகள நிரப்பப்பட்ட துப்பாக்கியொன்றும் இருந்ததாம் அதனையும் பொலிசார் எடுத்துக்கொண்டனர். [மா]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 [illegible] செப். 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri [illegible] under number Q.B. 10623[illegible] Eelanadu — P. O. Box 49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.